<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

வா.சா.1 தேதி 23.03.2026.

| | | | |
|---|---|---|---|
| OS.No. | 191/2024 | | |
| பெயர் | வின்செண்ட்பவுல் | த/பெ. | புஷ்பம் |
| வயது | 36 | தொழில் | முதன்மை மேலாளர், விஜயா வங்கி தற்போது பாங்க் ஆப் பரோடா, மயிலாடுதுறை. |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலுக்கா | மயிலாடுதுறை |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. எனது தரப்பில் ஆவணங்களாக. முதன்மை மேலாளருக்கு கொடுத்த பொது அதிகாரப் பத்திரம் **வா.சா,ஆ.1** ஆகவும், 10.06.2015 தேதியிட்ட 1ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் **வா.சா.ஆ.2** ஆகவும், 10.06.2015 தேதியிட்டு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Loan agreement cum Hypothecation Deed **வா.சா.ஆ.3** ஆகவும், 12.11.2009 தேதியிட்டு 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த General Form of Guarantee **வா.சா.ஆ.4** ஆகவும், 08.08.2012 தேதியிட்டு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt **வா.சா.ஆ.5** ஆகவும், 06.08.2015 தேதியிட்டு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt **வா.சா.ஆ.6** ஆகவும், 20.11.2017 தேதியிட்டு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt **வா.சா.ஆ.7** ஆகவும், 20.08.2020 தேதியிட்டு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt **வா.சா.ஆ.8** ஆகவும், 25.07.2023 தேதியிட்டு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt **வா.சா.ஆ.9** ஆகவும், 13.12.2024 தேதியிட்ட வாதி வங்கியில் தாக்கல் செய்த கணக்கு பேரேட்டு நகல் **வா.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,

மயிலாடுதுறை.